பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 05 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. ராசிபுரத்தில் கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

3. உலக புகையிலை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா 4 தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழல் போன்று உலக அளவில் நிலையற்ற சூழல் இருந்தபோதிலும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள மாதாந்திர பொருளாதார ஆய்வறிக்கையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு, பெரிய

பொருளாதார நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை போன்ற சவால்களுக்கு இடையே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அந்நியச்செலாவணி கையிருப்பு போதிய அளவில் உள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

நாட்டில் உள்ள முக்கிய தொழில்துறைகளின் செயல்பாடுகளில் சிறிய அளவிலான சரிவு ஏற்பட்டபோதிலும், உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள் சீராக நடைபெற்று வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில்லரை பணவீக்க விகிதம் 3 புள்ளி 4 சதவீதமாக இருப்பதாகவும், வங்கிக் கடன் வசதிகள் ஆண்டுதோறும் 17 சதவீத வளர்ச்சி கண்டு வருவதாகவும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சுகாதார கணக்குகளின் எண்ணிக்கை 90 கோடியை

கடந்து சாதனை படைத்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த 2021-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் மாநில மற்றும் யூனியன்பிரதேச அரசுகளின் வலுவான ஒத்துழைப்பு காரணமாக இந்த குறிப்பிடத்தக்க சாதனை படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 49 புள்ளி ஏழு ஐந்து சதவீத கணக்குகள் பெண்கள் பெயரில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின்கீழ் சுகாதார ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு பாதுகாப்பான சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதி செய்யப்படுவதாக சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் கட்டப்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு

கொண்டுவரப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

ராசிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்குவது குறித்து முதலமைச்சருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

பருவமழை காலத்தில் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரசுப் பணிகள் எவ்வித தொய்வும் இன்றி சீராக நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி தண்டனை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக புகையிலை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

புகையிலை பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மே மாதம் 31-ம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த தினத்தையொட்டி நாடு முழுவதும் புகையிலை பயன்பாட்டை தவிர்ப்பது குறித்தும், அதன் பாதிப்புகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் புகையிலைப் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Senthil - 36 Sec)**

<<<<>>>>

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு ஆகிய அணைகளில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்மூலம் அம்மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் உள்ள **10** ஆயிரத்து **265** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

கரீப் பருவ சாகுபடிக்கு உதவும் வகையில் ஜூன் ஒன்றாம் தேதி முதல் அக்டோபர் **2**ஆம் தேதி வரை **124** நாட்களுக்கு தண்ணீர்

திறந்துவிட உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

வங்கக் கடல் பகுதியில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த 3 நாட்களுக்கு இப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அர்மேனிய நாட்டிற்கான ரஷ்ய தூதர் திரு **Sergoi Kopyrkin-ஐ** அந்நாட்டு அரசு திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளது.

------------

ரஷ்யாவில் உள்ள பல்வேறு எண்ணைக் கிடங்குகள் மீது யுக்ரைன் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

------------

காங்கோவில் அறியவகை எபோலா வைரஸ் பரவி வருவதையடுத்து, மருத்துவ உதவிகள், சுகாதார வசதிகளை ஏற்பாடு செய்வதற்காக உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குனர் திரு **Tedros Adhanom Ghebreyesus** அந்நாட்டிற்குச் சென்றுள்ளார்.

------------

மேற்குவங்க மாநிலத்தில் தூய்மை பராமரிப்பு, அடிப்படை வசதிகளில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் புதிய மொபைல் செயலி தொடங்கப்பட்டுள்ளது.

------------

ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் **8** நபர்களை தில்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு கைது செய்துள்ளது.

------------

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், மின்வாரியம், பஞ்சாயத்து அலுவகங்களில் மாநில அமைச்சர் திரு மதன்ராஜ் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு, போக்குவரத்து விதிகள் குறித்து அம்மாவட்ட போக்குவரத்து காவலர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

------------

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களுக்கு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

------------

அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில், வைகாசி விசாகத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா நேற்று 4 தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.**

**ஹாங்காங்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் ஸ்டீபிள்சேஸ் போட்டியில் இந்தியாவின் நிகில் சந்திரசேகர் தங்கப் பதக்கம் வென்றார்.**

**உயரம் தாண்டுதலில் பசந்த்-ம், நீளம் தாண்டுதலில், ஷாநவாஸ் கானும் தங்கப்பதக்கம் வென்றனர்.**

**மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில், இந்தியாவின் ஆர்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.**

**இப்போட்டியில் இந்தியா இதுவரை 7 தங்கம், 7 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.**

**----------**

**உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் மனு பாக்கர் - சாம்ராட் ராணா இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.**

**ஜெர்மனியின் Munich-ல் நடைபெற்ற இப்போட்டியின் கலப்புக் குழு 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில், இந்த இணை இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.**

**பதக்கப் பட்டியலில், 2 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களுடன் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.**

-----------

**17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியா 2 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.**

**வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில், மகளிர் 73 கிலோ எடைப்பிரிவில், Garima-வும், 43 கிலோ எடைப்பிரிவில், Diksha-வும், தங்கப் பதக்கத்தை கைப்பற்றினர்.**

**Nikitha 49 கிலோ எடைப்பிரிவிலும், Antra 65 கிலோ எடைப்பிரிவிலும், Taniya 53 கிலோ எடைப்பிரிவிலும் வெள்ளிப் பதக்கத்தை வென்றனர்.**

**Palak, Anamika, Akshara, Sakshi, Manya Rajput, Anuj ஆகியோர் தத்தமது பிரிவுகளில் வெண்கலப் பதக்கத்தை வென்றனர்.**

------------

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில், பெங்களூரு அணி, குஜராத் அணியை எதிர்கொள்கிறது.**

**அஹமதாபாத்தில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**